தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 8 இடங்களில் வெயில் சதம்

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் 105 டிகிரி வெயில் சனிக்கிழமை (ஏப். 5) பதிவானது. இதேபோல, தருமபுரி, கரூர் பரமத்திவேலூர், மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

சனிக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

திருப்பத்தூர் (வேலூர்) - 105

கரூர் பரமத்திவேலூர், சேலம் - 104, வேலூர் - 103,

தருமபுரி - 102, மதுரை, திருச்சி - 101

பாளையங்கோட்டை - 100, கோவை - 99,

சென்னை மீனம்பாக்கம் - 96

சென்னை நுங்கம்பாக்கம் - 94

கொடைக்கானல் - 72

## பெரியகுளம் பகுதியில் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

**பெரியகுளம்,**

பெரியகுளம் பகுதி மா விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெரியகுளம் பகுதியில் மா விவசாயம் பிரதான தொழிலாக அமைந்துள்ளது. இப் பகுதியில் சோத்துப்பாறை, கும்பக்கரை, முருகமலை, ஈச்சமலை, மணல்காடு, கோயில் காடு, புலிக்கூடு, செலும்பு, சுக்காம்பாறை, சின்னாம்பாளையம் மற்றும்

மஞ்சளாறு உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மா விவசாயம் நடைபெறுகிறது. இவ் விவசாயத்தில் நீலம், செந்தூரம், காலேபாடி, கிரேப், மனோரஞ்சிதம், மல்கோவா, அல்போன்சா, இமாம்பசந்த், பங்கனபள்ளி மற்றும் கல்லாமை உள்பட பல்வேறு வகையான ரகங்கள் விளைகின்றன.

இப்பகுதியில் விளையும் மாம்பழங்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், குஜராத், ராஜஸ்தான் மற்றும் புதுச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்களுக்கு சீசன் காலமான ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை அனுப்பி வைக்கப்படுகின்றன. தினசரி சுமார் 30 லாரிகள் மூலம் இவை இப் பகுதியிலிருந்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

விளைச்சல் அதிகமான காலங்களில் மாம்பழங்களை பறித்து அனுப்ப முடியாத தேக்க நிலை ஏற்படுகிறது. இதனால் சேதம் ஏற்பட்டு, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே இந்நஷ்டத்தை தவிர்க்க இப்பகுதியில் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என மா விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பு மூலம் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை அமைக்கப்படுவதின் மூலம் மாம்பழங்களை பதப்படுத்தி மாம்பழக் கூழ் தயாரித்து, அதன் மூலம் மாம்பழ ஜூஸ், ஜாம் போன்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, ஆண்டு முழுவதும் விற்பைன செய்யலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு வருமானம் கிடைப்பதோடு, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

எனவே இப்பகுதி மா விவசாயிகளின் நலன் கருதி, சுமார் 20 ஆண்டு கால கோரிக்கையான மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ரூ. 4.30 லட்சம் நிலக்கடலை ஏலம்

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை ரூ. 4 லட்சத்து 31 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏல விற்பனை நடைபெற்றது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் நிலக்கடலை ஏல விற்பனை வரத்து இல்லாததால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது வரத்து அதிகரித்து வருவதால்

கடந்த இரண்டு வாரங்களாக ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வார ஏலத்துக்கு, திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் 284 நிலக்கடலை மூட்டைகளை விற்பனைக்காகக் கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 9 ஆயிரத்து 815 கிலோ நிலக்கடலை, ரூ. 4 லட்சத்து 31 ஆயிரத்து 720-க்கு விற்பனையானது.

அதிக பட்ச விலை கிலோ ரூ. 45.30, குறைந்த பட்ச விலை ரூ. 40.39-க்கும் ஏலம் போனது. ஏலத்தில், வெள்ளக்கோவில், சிவகிரி, முத்தூர், தாராபுரம் பகுதிகளை சேர்ந்த எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் பங்கேற்றனர். வரும் வாரங்களில் விலையும், வரத்தும் சீராகவே இருக்குமென விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## ஏப்.15 முதல் மே 29 வரை மீன்பிடிக்க தடை: ஆட்சியர் அறிவிப்பு

**ராமநாதபுரம்,**

மீன்கள் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு ஏப். 15 ஆம் தேதி முதல் மே 29ஆம் தேதி வரை விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைக் கொண்டு கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டிருப்பதாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்கு படுத்தும் சட்டம் 1983ன் கீழ் தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் மீன்களின் இனப் பெருக்க காலத்தை கருத்தில் கொண்டும், மீன்வளத்தைப் பாதுகாத்திடும் பொருட்டு ஆண்டுதோறும் ஏப்.15 முதல் மே 29 ஆம் தேதி வரை 45 நாள்களுக்கு விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைக் கொண்டு கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இதே போல இந்த ஆண்டும் இக்காலங்களில் மீனவர்கள் மீன்பிடி கலன்களை உபயோகப்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல தடை விதிக்கப்படுகிறது. எனவே, மீனவர்கள் யாரும் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

**இடதுகரைக் கால்வாயில் தூர்வாரும் பணி தொடக்கம்**

**குலசேகரம்,**

குமரி மாவட்டத்தில் அணைகள் மூடப்பட்டுள்ள நிலையில் பாசனக் கால்வாயான கோதையாறு இடது கரைக் கால்வாயில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

குமரி மாவட்டத்தில் இரண்டாம் பருவமான கும்பப் பூ அறுவடைப் பணிகள் நடந்து வரும் நிலையில் பிரதான அணைகளான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகள் மூடப்பட்டுள்ளன.

அணைகள் மூடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாசனக் கால்வாய்களில் ஏற்படுள்ள உடைப்பு மற்றும் மதகுகள் சீரமைப்பு உள்ளிட்ட பணிகளை விரைந்து தொடங்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கோதையாறு இடதுகரைக் கால்வாயில் 8 கி.மீட்டரிலிருந்து புத்தன் அணை வரையிலான பகுதிகளில் தூர்வாரும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ஏற்கெனவே விடப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலானது எனவும், புதிய சீரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் உடனடியாக விடப்பட்டு கால்வாயில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை விரைந்து சீரமைக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தூத்துக்குடியில் மீன் ஏலக்கூடம் திறப்பு**

**தூத்துக்குடி,**

தூத்துக்குடி இனிகோ நகரில் ரூ. 14 லட்சம் செலவில் கட்டடப்பட்ட மீன் ஏலக்கூட திறப்பு விழா நடைபெற்றது.

தூத்துக்குடி இனிகோ நகரில் உள்ள மீன்கள் ஏலக்கூடம் பழுதான நிலையில் காணப்பட்டதால், மீனவர்களின் வேண்டுகோளை ஏற்று ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனம் சார்பில் ரூ. 14 லட்சம் செலவில் இது புதிதாகக் கட்டடப்பட்டு, திறப்பு விழா நடைபெற்றது. இந்த கட்டடத்தை ஸ்டெர்லைட் காப்பர் நிறுவன முதன்மைச் செயல் அலுவலர் பி. ராம்நாத் திறந்து வைத்து, மீனவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கினார். இந்த ஏலக்கூடத்தால் இனிகோ நகர், பாத்திமா நகர்,

காந்திநகர், லயன்ஸ் டவுன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பயன் பெறுவர் என ராம்நாத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் ஞாயம் ரொமால்ட், தென்பாக மீனவர் சங்கத் தலைவர் பாஸ்கர், ஸ்டெர்லைட் நிதித் துறை தலைவர் சரத் கார்கியா, மனிதவளத் துறை தலைவர் சுரேஷ் போஸ், திட்டங்கள் துறை பொதுமேலாளர் செல்வசங்கர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சென்னையில் அனல் காற்று சற்று குறைவு : தென்காசி, செங்கோட்டையில் மழை**

**சென்னை**: "வங்கக்கடலில் உருவான மாற்றங்கள் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரி யில் அடுத்த இரு தினங்களுக்கு ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மழைக்கு வாய்ப்பு உள்ளது : "வங்கக்கடலில் உருவான காற்றழுத் தாழ்வு நிலையின் காரணமாக, கடந்த ஒரு வாரமாக, கர்நாடகா, ஆந்திரா, தமிழகம் மற்றும் கேரளாவில் சில பகுதிகளில் மழைக்கு வாய்ப்பு உள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. ஆனால், கடந்த ஒரு வாரமாகவே தமிழகத்தில் மழை எங்கும் பெய்ய வில்லை; மாறாக வெப்பநிலை, வழக்கத்தை விட அதிகரித்துள்ளது.

இந்நிலையில், குமரிக் கடல் பகுதியில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, நேற்று முன்தினம், நெல்லை மற்றும் கோவையில் மழை பதிவாகியுள்ளது.

நெல்லை மாவட்டம், தென்காசி, செங்கோட்டையில் அதிகபட்சமாக, 4 செ.மீ., ஆயகுடி, 3, சங்கரன் கோவில், 1 செ.மீ., மற்றும் கோவை மாவட்டம், வால்பாறையில், 2 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. "தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்னும் இரு தினங்களுக்கு, ஆங்காங்கே லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை நகரில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அதிகபட்சம், 35,

குறைந்தபட்சம், 27 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் அதிகம் : வெப்பத்தை பொறுத்தவரை, கடந்த சில தினங்களாக சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில், அனல் காற்றின் தாக்கம் குறைந்துள்ளது. 39 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகிய வெப்பம், சற்றே குறைந்து, 35 டிகிரியாக பதிவாகியுள்ளது. நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, சேலத்தில், 40, வேலூர், திருச்சி, திருத்தணி, மதுரை, தர்மபுரியில், 39 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

**சிவகாசியில் சூறாவளி: ரூ.10 லட்சம் வாழைகள் சேதம்**



**சிவகாசி**: சிவகாசி பகுதியில் வீசிய, சூறாவளி காற்றால், 100 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த, ரூ.10 லட்சம் மதிப்பிலான, வாழைகள் சாய்ந்தன. சிவகாசி அருகே உள்ள செங்கமல நாச்சியார்புரம், திருத்தங்கல் பகுதியில், 100 ஏக்கரில் வாழைகள் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. நேற்று முன்தினம் மாலை 4:00 மணிக்கு, திடீரென வீசிய சூறாவளியால், வாழைகள் ஒடிந்து, சாய்ந்தன.

கங்காகுளம் கரையோர பகுதி கிணற்று பாசனத்தில், முருகன் என்பவர் 3 ஏக்கரில் சாகுபடி செய்து இருந்த வாழையில், 500 மரங்கள், குலைகளுடன் சாய்ந்தன. இதே பகுதியில், குமார் என்பவரின் தோட்டத்தில் 500 மரங்கள், சீனிவாசன் தோட்டத்தில் 1000, திருத்தங்கல் பெரியகுளம் கண்மாயை யொட்டிய வைரம் என்பவரது தோட்டத்தில் 4000, தர்மர், பாக்கியம், அண்ணாமலை சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள் என மொத்தம்,10 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்தன. இதன் மதிப்பு, ரூ.10 லட்சம் இருக்கும் என, விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயி

முருகன் கூறுகையில், "மழை இல்லாமல் வறட்சியான சூழ்நிலையில், சிரமப்பட்டு கிணற்று பாசனத்தில் வாழை சாகுபடி செய்தோம்.

நேற்று அடித்த சூறாவளியில், எனது தோட்டத்தில் இருந்த 500 வாழைகள் குலைகளுடன் சாய்ந்தன. தற்போது, ஒரு வாழை தார் ரூ.130க்கு விலைபோகிறது. இலையும் நல்ல விலை போகும் நேரத்தில், இப்படி சூறாவளி வீசி, நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அரசு நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

## சிரபுஞ்சியில் பதிவான மழையே உலக சாதனை : உலக வானிலை நிறுவனம் ஒப்புதல்


இந்தியாவின் சிரபுஞ்சி, அதிக மழைப் பொழிவில், உலக சாதனை படைத்துள்ளதாக, உலக வானிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

புவி வெப்பமடைதல் காரணமாக, பருவநிலையில் பல்வேறு மாற்றங்கள் நடந்த போதிலும், நம் நாட்டில், மேகாலயா மாநிலத்தில் உள்ள சிரபுஞ்சி தான், ஆண்டு முழுவதும் மழை பெய்யும், ஈர நிலத்தை கொண்ட பகுதியாக அறியப்படுகிறது. இங்கு, உலக வானிலை நிறுவனத்தின் தொடர் ஆய்வில், கடந்த, 1995 ஜூன், 15, 16 தேதிகளில் பெய்த, 2,493 மி.மீ., மழை, உலக சாதனையாக தெரிய வந்துள்ளது. முன்னதாக, இந்திய பெருங்கடலில் உள்ள, பிரான்ஸ் நாட்டிற்கு சொந்தமான, "லா ரெயூனியன்' தீவுகளில், 1958 ஏப்ரலில், 48 மணி நேரத்தில், பதிவான, 2,467 மி.மீ., மழையே உலக சாதனையாக இருந்தது.

உலக வானிலை நிறுவனத்தின், பருவகாலம் சார்ந்த ஆய்வாளர்கள், இந்த தகவலை இம்மாதம், வெளியிட்டுள்ளனர். இதற்காக, பல ஆண்டுகள் பெய்த மழை அளவும், கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய வானிலை மையத்தின் உதவியுடன், அர்ஜென்டினா, கொலம்பியா, பிரான்ஸ், ஜெர்மனி, மொராகோ, ஸ்பெயின், அமெரிக்காவைச் சேர்ந்த வானியல் விஞ்ஞானிகளும் ஆய்வில் ஈடுபட்டு, இத்தகவலை தெரிவித்துள்ளனர்.

 **சென்னை**

| | | |
|---|---|---|
| **Today** | | **Mon, 07 Apr 2014 9:11 am IST** |
| வெப்பநிலை: |  | **31° C** |
| அழுத்தம்: | **Partly Cloudy** | 982.05 mb |
| ஈரப்பதம்: | | 66 % |
| காட்சிமை : | | 7 km |
| வைகறை: | 6:01 am | அ.வெப்பநிலை:36°C |
| அந்தி: | 6:21 pm | கு.வெப்பநிலை:26°C |
| காற்றின் வேகம் : | 22.53 km/h | |

**மதுரை**

| | | |
|---|---|---|
| | **Today** | **Mon, 07 Apr 2014 9:11 am IST** |
| | வெப்பநிலை: | **32° C** |
| | அழுத்தம்: | 982.05 mb |
| | ஈரப்பதம்: | 66 % |
| | காட்சிமை : | 2.99 km |
| வைகறை: | 6:10 am | அ.வெப்பநிலை:38°C |
| அந்தி: | 6:26 pm | கு.வெப்பநிலை:27°C |
| காற்றின் வேகம் : | 8.05 km/h | |

***திருச்சி***

| | | |
|---|---|---|
| | **Today** | **Mon, 07 Apr 2014 9:11 am IST** |
| | வெப்பநிலை: | **32° C** |
| | அழுத்தம்: | 982.05 mb |
| | ஈரப்பதம்: | 66 % |
| | காட்சிமை : | 2.99 km |
| வைகறை: | 6:10 am | அ.வெப்பநிலை:39°C |
| அந்தி: | 6:26 pm | கு.வெப்பநிலை:26°C |
| காற்றின் வேகம் : | 8.05 km/h | |

## இன்றைய வேளாண் செய்திகள்

### எலுமிச்சை விற்பனை ஜோர்



**போச்சம்பள்ளி:** கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் எலுமிச்சை விற்பனை சூடு பிடித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ஒரு பழம் ரூ.5க்கு விற்கப்படுகிறது. போச்சம்பள்ளி பகுதியில் உள்ள கடைகளில் எலுமிச்சை பழத்தை மொத்தமாக

வாங்கி வந்து விற்கப்படுகிறது. கோடைக்கு முன்னதாகவே வெயில் கொளுத்தி வருவதால், எலுமிச்சையின் தேவை அதிகரித்துள்ளது.

சில்லரை வியாபாரிகளும் அதிக அளவில் வாங்கி செல்வதால், கடந்த வாரம் 2க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பழம் ரூ.5 ஆக உயர்ந்துள்ளது.

எலுமிச்சையின் தேவை இன்னும் அதிகரிக்கும் என்பதால் அதன் விலை இன்னும் உயரும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மஞ்சள் ஏலம் அமோகம் : விவசாயிகள் மகிழ்ச்சி**



**திருச்செங்கோடு**: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு ஆத்தூர், கெங்கவல்லி, கள்ளக்குறிச்சி, அரூர், நாம க்கல், மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 2,500 மூட்டை மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இது கடந்த வாரத்தை விட ஆயிரம் மூட்டைகள் அதிகமாகும். இதை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், சேலம் ஆகிய இடங்களிலிருந்து வியாபாரிகள் வந்திருந்தனர்.

நேற்று நடந்த ஏலத்தில் ரூ.1.25 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7,200 முதல் ரூ.8,800 வரை ஏலம் போனது. கிழங்கு ரகம் ரூ.6,500 முதல் ரூ.7,300 வரை விலை போனது.

பனங்காளி ரகததிற்கு ரூ.8,500 முதல் ரூ.11,500 வரை விலை கிடைத்தது.

விரலி ரகத்திற்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**உணவுப் பொருட்கள் விலை ஏற மோசமான வானிலையே காரணம்...**



**ரோம்:** மோசமான வானிலையால் உலகளவில் உணவுப் பொருட்களின் விலை 2.3 சதவீதம் உயர்ந்துள்ளது. அமெரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில் மோசமான வானிலை காரணத்தாலும், உக்ரைன் ரஷ்யாவிற்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்னையாலும் கடந்த மார்ச் மாதம் உலகளவில் உணவுப் பொருட்களின் விலை 2.3 சதவீத அளவிற்கு உயர்ந்துவிட்டதாக ஐ.நாவின் துணை அமைப்பான உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (எப்ஏஓ) கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் உணவு விலை அட்டவணையை ஒப்பிட்டு பார்க்கும் போது மார்ச் மாதம் உணவுப் பொருட்களின் விலை 2.3 சதவீதம் உயர்ந்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உணவு உற்பத்தி போதுமானதாக இருக்காது. இதன் காரணமாக அடுத்து வரும் வேளாண்மை பருவத்தில் அரிசி கையிருப்பில் சரிவு ஏற்படும் என்றும் எப் ஏ ஓ எச்சரித்துள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, உலகளவில் உணவுப் பொருட்களின் தேவையை சமாளிப்பதற்காக உணவுப் பொருட்கள் சந்தையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. நடப்பு ஆண்டில் (2014) உலக அளவில் கோதுமை உற்பத்தி 702 மில்லியன் டன்னாக இருக்கும் என்றும், இது கடந்த 2013ம் ஆண்டை விட 2 சதவீதம் குறைவானது என்றும் ரோம் நகரை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஒரு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரிசி உற்பத்தி 500.7 மில்லியன் டன்னாக இருக்கும் என்றும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிகாட்டியுள்ளது.

**மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி**



**பரமத்தி வேலூர்:** நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் மரவள்ளியை புதன் சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரிப்பேட்டை, தொ.ஜேடர்பாளையம், ஆத்தூர் பகுதிகளில் செயல்படும் ஜவ்வரிசி தயாரிக்கும் மில்களுக்கு டன் கணக்கில் அனுப்பப்படுகிறது. மரவள்ளிக் கிழங்குகளை (டார்ச்) பாயிண்ட் அடிப்படையில் வாங்குகின்றனர். ஜவ்வரிசி விலை உயரும் போது மரவள்ளி விலை உயர்வும், வீழ்ச்சி அடையும் போது விலை குறைத்தும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன் ரூ.11,500க்கு விற்றது. இந்த வாரம் ரூ.10 ஆயிரத்துக்கு மட்டுமே விற்பனையானது.

**விளைச்சல் குறைவால் இந்தியாவில் பருத்தி ஏற்றுமதி சரியும்**



**புதுடெல்லி**: நடப்பு நிதியாண்டில் (2014-2015) இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி 23 சதவீதம் குறையக்கூடும் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து

அமெரிக்க வேளாண்மைத் துறை சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: இந்தியாவில் 2013-2014ம் ஆண்டில் 37.2 மில்லியன் பேல் பருத்தி (ஒரு பேல் 170 கிலோ) உற்பத்தியானது.

இது நடப்பு ஆண்டில் பருத்தி விளைச்சல் குறைந்து 36 மில்லியன் பேல் மட்டுமே உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக நடப்பு (201415) ஆண்டில் 7.7 மில்லியன் பேல் பருத்தி மட்டுமே ஏற்றுமதி செய்யப்படும். இது 23 சதவீதம் குறைவானது.

2013-14ல் 10 மில்லியன் பேல் பருத்தி ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இதுவரை 8.8 மில்லியன் பேல்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைவான விளைச்சலாலும், உள்நாட்டு தேவை அதிகரித்துள்ளதாலும் பருத்தி ஏற்றுமதியில் சரிவு காணப்படுகிறது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து மீண்டும் பருத்தி சப்ளை செய்யப்படலாம்.

உள்நாட்டு ஜவுளிக்கு தேவையான பருத்தி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் ஏற்றுமதி நடவடிக்கைகளை இந்திய அரசு கண்காணிக்கும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தடை காலம் 15–ந் தேதி தொடங்குவதால் வங்க கடலில் விசை படகு மீன்பிடிப்பு நிறுத்தம் மீன் விலை உயரும் அபாயம்**



**சென்னை,**

மீன்பிடி தடைக்காலம் 15–ந் தேதி தொடங்குவதால், வங்க கடலில் விசை படகு மீன்பிடிப்பு படிப்படியாக நிறுத்தப்பட்டு வருகிறது. ஆழ்கடலுக்குள் சென்ற விசை படகுகள் கரை திரும்பி வருவதால், மீன் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

<u>மீன்பிடி தடை காலம்</u>

வங்க கடலில் வாழும் மீன்களின் இனப்பெருக்கத்திற்கு சாதகமான காலம் என்று ஏப்ரல், மே மாதங்களை கடல் ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். அந்த காலங்களில் மீன்கள் ஆழ்கடலில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும்.

எனவே, கடலில் மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில் கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதிகளில் 45 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது. இந்த நாட்களில் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க விசை படகுகளுக்கு அனுமதி கிடையாது. ஆனால், கரையில் இருந்து

சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று மீன் பிடிக்கும் கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளுக்கு அனுமதி உண்டு.

மீன் விலை உயரும்

மீன்பிடி தடை காலமான 45 நாட்களும் விசைபடகுகள் அனைத்தும் கடற்கரையில் ஓய்வெடுக்கும். இந்த ஆண்டு மீன்பிடி தடை காலம் வரும் 15–ந் தேதி (செவ்வாய்கிழமை) நள்ளிரவு முதல் தொடங்குகிறது. இந்த தடை காலம் மே மாதம் 29–ந் தேதி வரை நீடிக்க இருக்கிறது. தற்போது, தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா கடல் பகுதியில் வாரக்கணக்கில் மீன்பிடிக்கும் விசை படகுகள் கரைக்கு திரும்பி வருகின்றன.

இனி தமிழகம் முழுவதிலும் இருந்து 15 ஆயிரம் விசை படகுகள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது. சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மட்டும் சுமார் ஆயிரம் விசை படகுகள் கரையில் ஓய்வெடுக்கும்.

விலை விவரம்

தமிழ்நாட்டில் மீன்பிடி தடை காலம் இன்னும் ஒரு வாரத்தில் தொடங்க உள்ள நிலையில், தற்போதே மீன் விலை உயரத்தொடங்கியுள்ளன. நேற்று சென்னை சிந்தாதிரிப்பேட்டை மொத்த மீன் மார்க்கெட்டில், வஞ்சிரம் ஒரு கிலோ ரூ.500–க்கும், விரால் ரூ.450–க்கும், சங்கரா ரூ.240–க்கும், ஷீலா ரூ.300–க்கும், எறா ரூ.400–க்கும், சுறா ரூ.250–க்கும் விற்பனை செய்யப்பட்டது. கரையோரம் பைபர் படகுகளில் சென்று பிடிக்கும் அயிலை கிலோ ரூ.120–க்கும், மத்தி ரூ.60–க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், சில்லறை மீன் கடைகளில் இதைவிட அதிக விலை வைத்தே மீன்கள் விற்பனை செய்யப்பட்டன. மீன்பிடி தடை காலத்தில் குறைந்த அளவு மீன்களே பிடிக்கப்படுவதால், தமிழக மீன் தேவைக்கு கர்நாடகா, மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படும். இதனால், தமிழகத்தில் மீன் விலை உயர வாய்ப்பு இருப்பதாக சென்னை மாவட்ட மீன் வியாபாரிகள் சங்க பொதுச் செயலாளர் ஷெரிப் தெரிவித்தார்.

**கடந்த நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் தேயிலை உற்பத்தி 7% அதிகரிப்பு**



**புதுடெல்லி,**

கடந்த 2013–14–ஆம் நிதி ஆண்டின் முதல் 11 மாதங்களில் (ஏப்ரல்–பிப்ரவரி) தேயிலை உற்பத்தி 7 சதவீதம் அதிகரித்து 115.29 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் உற்பத்தி அதிகரித்ததே இதற்கு காரணமாகும். இது முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் 107.39 கோடி கிலோவாக இருந்தது. தேயிலை வாரியத்தின் புள்ளி விவரம் மூலம் இது தெரிய வந்துள்ளது.

**அசாம், மேற்கு வங்காளம்**

தேயிலை உற்பத்தியில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. சென்ற நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில் அசாம் மாநிலத்தில் தேயிலை உற்பத்தி 5.19 சதவீதம் அதிகரித்து 61 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் 57.80 கோடி கிலோவாக இருந்தது.

இதே காலத்தில், மேற்கு வங்காளத்தின் தேயிலை உற்பத்தி 11 சதவீதம் அதிகரித்து 26.53 கோடி கிலோவிலிருந்து 29.37 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம், மேற்கு வங்காளம் மற்றும் தென் மாநிலங்களின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது. தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களின் மொத்த தேயிலை உற்பத்தி 13 சதவீதம் அதிகரித்து 20 கோடி கிலோவிலிருந்து 22.69 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

**இந்தியா 2–வது இடம்**

சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேசமயம், நுகர்வில் முதல் இடத்தில் உள்ளது. இதன் காரணமாக, மொத்த தேயிலை உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி குறைவாகவே உள்ளது. சி.டி.சி. ரக தேயிலை பிரதானமாக எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**காபி பயிரை தாக்கும் வெள்ளைத் தண்டு துளைப்பான் பூச்சி**

சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள காபி பயிர்கள் போதிய மழை இல்லாத காரணத்தினால் அவற்றின் செடிகள் வாடிய நிலையில் காணப்படுகின்றன. கடந்த 2 ஆண்டுகளாக வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்யவில்லை. இதனால் காபி பயிரில் வெள்ளைத் தண்டு துளைப்பான் பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டுப்பாடு முறைகளை கடை பிடிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட செடிகளை கண்டறிந்து அவற்றை வேருடன் எரிக்க வேண்டும். தோட்டங்களில் சரியான நிழல் பராமரிப்பு முறைகளை கையாள்வதன் மூலம் இந்த பூச்சிகளின் பாதிப்பை குறைக்கலாம். இந்த பூச்சியின் பாதிப்பை தடுக்க 10 சதவீத சுண்ணாம்பு கலவையை காபி செடியின் தண்டுப்பகுதி மற்றும் தாய் வாதுகளில் தடவ வேண்டும்.

இனக்கவர்ச்சி பொறியை காபி தோட்டங்களில் ஒரு ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் வைப்பதன் மூலம் வெள்ளைத் தண்டு துளைப்பான் பாதிப்பை குறைக்கலாம். இந்த இனக்கவர்ச்சி பொறியானது காபி வாரியத்தால் மானிய விலையில்(ஒரு பொறியின் விலை ரூ.50) வழங்கப்படுகிறது.

தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள முதுநிலை தொடர்பு அலுவலர், விரிவாக்க அலுவலகம், ஏற்காடு அல்லது ஆராய்ச்சி இயக்குனர், மத்திய காபி ஆராய்ச்சி நிலையம், பாலகனூர், சிக்மங்களூர் மாவட்டம், கர்நாடகம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். மேலும் தொழில் நுட்ப உதவி

தேவைப்படுபவர்கள் ஏற்காடு காபி வாரியத்தை தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்தூர்பேட்டை பகுதிகளில் கனகாம்பரம் பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



**உளுந்தூர்பேட்டை,**

உளுந்தூர்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கனகாம்பரம் பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**கனகாம்பரம் பூ சாகுபடி**

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 வருடங்களாக விவசாயத்திற்கு போது மான மழை பெய்யாததால் பல விவசாயிகள் தங்களது நிலத்தை பயிர் செய்யாமல் தரிசுநிலமாக விட்டுள்ளனர். இந்நிலையில் கிணற்று பாசன விவசாயிகள் மட்டும் குறுகிய கால பயிர்களையும், தண்ணீர் குறைவாக தேவைப்படும் பயிர்களையும் பயிரிட்டு வரு கின்றனர்.

இந்நிலையில் உளுந்தூர் பேட்டை சுற்றுவட்டாரப் பகுதிகளான காட்டுநெமிலி, எறையூர், கிளியூர், குன்னத்தூர், வடமாம்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் கனகாம்பரம் பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கோடை காலங்களில் நிலத்தடி நீரை அதிகம் உறிஞ்சாத இந்த கனகாம்பர செடியால் அப்பகுதி விவசாயிகள் நல்ல லாபம் அடைந்து வருகின் றனர்.

இதற்காக விவாசாயிகள் தங்களுக்கு வழக்கமான விவசாய நிலத்தின் ஒரு பகுதியை ஒதுக்குகின்றனர். எல்லா காலங்களிலும் பூக்கும் பூ என்பதால் அதிகப்படியான விவசாயிகள் பயிர் செய்கின்றனர். இதில் பூக்கும் பூக்களை உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், விழுப்புரம் மற்றும் கள்ளகுறிச்சி ஆகிய ஊர்களில் உள்ள கடைகளுக்கு விற்பனைக்காக அனுப்புகின் றனர்.

## குறுகியகாலத்தில் நல்ல விளைச்சல்

இது பற்றி விவசாயி ஒருவர் கூறியதாவது, கனகாம்பரம் பூ சாகுபடிக்கு தங்களது விவசாய நிலத்தின் ஒரு பகுதியை மட்டும் ஒதுக்கினால் போது மானது. பதினைந்து நாட் களுக்கு ஒரு முறை களை யெடுக்கிறோம். தண்ணீரை அதிகம் பாய்ச்ச வேண்டிய தில்லை என்பதால் குறுகிய காலத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. வாரத்திற்கு ஒரு முறை உரம் போட்டாலே போதுமானது. தினமும் தொடர்ந்து பூத்து வரும் இதனை வியாபாரிகள் நேரிடையாகவே வந்து வாங்கி செல்கின்றனர். தற்போது 1 கிலோ கனகாம்பரம் பூ ரூ.100 முதல் 150 வரை விற்கப்படுகிறது என்றார்.

## நத்தம் பகுதிகளில் வெப்பம் தாங்காமல் உதிரும் மாம்பிஞ்சுகள்



நத்தம் பகுதிகளில் வெப்பம் தாங்காமல் மாம்பிஞ்சுகள் உதிர்ந்து வருவதால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மா சாகுபடி

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதிகளில் அதிக அளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இதில் நத்தம் மற்றும் சாணார்பட்டி யூனியன் பகுதிகளில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மா பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முதல் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை சரிவர பெய்யாமல் பொய்த்துவிட்டது. இதனால் கடும் வறட்சிநிலை ஏற்பட்டு கடந்த 4 மாதங்களாக மழை பெய்யாமல் வெப்பநிலையே நிலவி வருகிறது.

இதனால் மாமரங்களுக்கு தேவையான நீர்ச்சத்து கிடைக்கவில்லை. இதையொட்டி பல விவசாயிகள் ஆங்காங்கே ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதன் மூலம் கிடைக்கும் சிறிதளவு நீரை வைத்து விவசாயம் செய்து வருகிறார்கள். இது தவிர டேங்கர் லாரி, டிராக்டர்கள் மூலமும் தண்ணீரை விலைக்கு வாங்கி மரங்களை காப்பாற்றி வருகின்றனர். இதில் பல இடங் களில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் போது தண்ணீர் கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மூட்டை, மூட்டையாக

இந்த நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் மாமரங்கள் பூக்கத் தொடங்கின. இதில் மார்ச் மாதத்தில் வெயிலையும் தாக்குப் பிடித்து அதையும் மீறி பிஞ்சுகள் காய்த்தன. அப்போது பூமியில் போதுமான ஈரம் இல்லாத காரணத்தினாலும், மழையில்லாததாலும் மாமரங்களில் இருந்து பிஞ்சுகள் கொத்துக் கொத்தாக உதிர்கின்றன. நத்தம் பகுதியில் உள்ள வத்திபட்டி, லிங்கவாடி, காசம்பட்டி, குட்டுப்பட்டி, செந்துறை, சிறுகுடி, மணக் காட்டூர், வேம்பார்பட்டி, கோபால்பட்டி, அதிகாரிபட்டி, மலைக்கேணி, சிலுவத்து£ர் உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளில் இருந்து மாம்பிஞ்சுகள் மூட்டை, மூட்டையாக சேகரிக்கப்படுகிறது. பின்னர் அதை நத்தம், வத்திபட்டி, கோபால்பட்டி மற்றும் செந்துறை போன்ற பகுதிகளில் விற்பனைக்காக குவித்து வைத்துள்ளனர்.

பல கோடி ரூபாய் இழப்பு

நத்தம் தொகுதி தென்னை மாமர பழப்பண்ணை அமைப்புக்குழு தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது கூறும்போது, வறட்சியின் காரணமாக இந்த

ஆண்டு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நத்தம் பகுதிகளில் வெப்பம் தாங்காமல் அதிக அளவில் மாம்பிஞ்சுகள் உதிர்ந்து வருவதால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர், என்று கூறினார்.

## கோபால்பட்டி மார்க்கெட்டுக்கு விளைச்சல் இல்லாததால் தக்காளி வரத்து குறைந்தது



**கோபால்பட்டி,**

கோபால்பட்டி பகுதிகளில் விளைச்சல் இல்லாத காரணத்தால் மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து குறைந்து விட்டது.

**தக்காளி மார்க்கெட்**

திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி ஒன்றியம் கோபால்பட்டியில் தக்காளி மார்க்கெட் இயங்கி வருகிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் இந்த மார்க்கெட்டுக்கு வேம்பார்பட்டி, கணவாய்பட்டி, வி.எஸ்.கோட்டை, ஜோத்தாம்பட்டி, அஞ்சுகுழிப்பட்டி, மணியக் காரன்பட்டி, பாறைப்பட்டி, மந்தநாயக்கன்பட்டி உள்பட பல்வேறு கிராமங்களில் இருந்து தக்காளி கொண்டு வரப்படுகிறது. பின்னர் இந்த தக்காளி கோபால்பட்டியில் இருந்து தேவகோட்டை, பரமக்குடி, காரைக்குடி பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**வரத்து குறைந்தது**

தற்போது கோபால்பட்டி பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் தக்காளி விளைச்சல் வெகுவாக குறைந்துவிட்டது. இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்தும் வெகுவாக குறைந்து விட்டது. இது குறித்து கமிஷன் கடையை சேர்ந்த தண்டபாணி என்பவர் கூறியதாவது:-

கோபால்பட்டி பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இதனால் தக்காளி பயிரிடும் பரப்பளவு வெகுவாக குறைந்து விட்டது. பனிப்பொழிவு இருந்தால் தக்காளி நன்றாக காய்க்கும். ஆனால் தற்போது கடும் வெயில் இருந்து வருவதால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. 15 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி ரூ.120 முதல் ரூ.150 வரை ஏலம் போகிறது. கோபால்பட்டி மார்க்கெட்டில் 20 கமிஷன் கடைகளுக்கு மேல் இருந்தது. ஆனால் தற்போது 5 கடைகள் மட்டுமே உள்ளன. எனவே தக்காளி விவசாயிகள் மா மற்றும் தென்னை விவசாயத்துக்கு மாறி வருகிறார்கள். மேற்கண்டவாறு அவர் கூறினார்.

**கம்பம் பகுதியில் வயல்களில் ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் விவசாயிகள் முடிவு**



**கம்பம்,**

கம்பம் பகுதியில் வயல் களில் ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்யும் பணியில் விவசாயிகள் களம் இறங்கி உள்ளனர்.

## விவசாயம் பாதிப்பு

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் உள்ள நன்செய் நிலங்களில் விவசாயம் மூன்று போக சாகுபடியாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக இரண்டு போக சாகுபடியாகி மெல்ல மெல்ல ஒரு போக சாகுபடியாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. மழை இல்லாமல் போனதே இதற்கு காரணம். சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்றவாவது தண்ணீர் கொடுங்கள் என்று போராடும் அளவிற்கு விவசாயிகள் நிலை பரிதாபமாகி விட்டது. முல்லைப்பெரியாறு அணை யில் தண்ணீர் இல்லாததால் நிலைமை மிகவும் கவலைக் குள்ளானது. தற்போது கோடை வெயில் கடுமையாக வாட்டி வருகிறது. இந்த ஆண்டும் மழை பொய்த்து விடுமோ என்ற கவலை கம்பம் பள்ளத்தாக்கு விவசாயி களிடம் உருவாகி உள்ளது.

## ஆழ்துளை கிணறு

ஆண்டுதோறும் ஜூன் மாதம் 1–ந்தேதி அன்று விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடுவார்கள். ஆனால் இந்த ஆண்டு நிலைமையை பார்த்தால் ஜூன் மாதம் மட்டும் அல்ல, அதற்கு பிறகு கூட தண்ணீர் கிடைக்காது போல் இருக்கிறது. இதனால் தற்போது ஆழ்துளை கிணறில் இருக்கும் தண்ணீர் மூலம் முடியும் அளவு விவசாயம் செய்யலாம் என்ற முடிவுக்கு கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விவசாயிகள் வந்து உள்ள னர். இதையடுத்து தற்போது கம்பம் சுற்றுவட்டார பகுதி களில் உள்ள நன்செய் வயல் வெளிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் வேலை களை விவசாயிகள் தொடங்கி உள்ளனர்.

**சின்னமனூரில் முருங்கைக்காய் விளைச்சல் குறைந்ததால் விவசாயிகள் பாதிப்பு**



**சின்னமனூர்,**

சின்னமனூர் சுற்று வட்டார பகுதிகளில் முருங்கைக்காய் விளைச் சல் குறைந்து, விலையும் சரிந்துள்ளதால் விவசாயி கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**<u>முருங்கை சாகுபடி</u>**

தேனி மாவட்டம் சின்ன மனூர், ஓடைபட்டி, காமாட்சி புரம், வெள்ளையம்மாள்புரம், சுக்காங்கல்பட்டி, மூர்த்திநாயக் கன்பட்டி உள்ளிட்ட கிராமங் களில் சுமார் 200 ஏக்கருக்கும் மேல் முருங்கைக்காய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பருவ மழை பொய்த்து போனதால் தண்ணீர் இல்லாமல் இந்த பகுதிகளில் முருங்கை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

சின்னமனூர் சுற்று வட்டார பகுதிகளில் விளை யும் முருங் கைக்காய் வெளி மாநிலங் களுக்கும், சிங்கப்பூர், மலே சியா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடு களுக் கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2 மாதங் களுக்கு முன்பு சந்தைக்கு 1½ டன் வரை முருங்கைக்காய் வரத்து இருந் தது. கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற் பனை ஆனது.

**<u>விளைச்சல் குறைவு</u>**

மழை இல்லாமல் விளைச் சல் குறைந்ததால், தற்போது முருங்கைக்காய் வரத்து 500 கிலோவாக குறைந்து உள்ளது. மேலும் விலையும் சரிந்து கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரையே விற்கப்படுகிறது. மழை பொய்த்ததால் பாதிக் கப் பட்டு இருந்த விவசாயிகள் தற்போது முருங்கைக்காய் விலையும் சரிந்துள்ளதால் கவலைஅடைந்துஉள்ள னர்.

முருங்கைக்காய் பறிப் பதற்கு தொழிலாளி ஒரு வருக்கு கூலியாக ரூ.120 தரப் படுகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முருங்கைக்காய் கள் வைக்கும் பெட்டிகளுக் கான செலவும் விவசாயிகளின் தலையில் தான் விழுகிறது. ஒரு பெட்டியை ரூ.6 என்ற அளவில் வாங்கி அதில் முருங் கைக்காய் களைஅனுப்பி வருகின்றனர். முருங்கை நடவு, தொழி லாளர்களுக்கு கூலி, விற்பதற் காக பெட்டி,

சந்தைக்கு வர வாகன வாடகை உள்ளிட்ட செலவுகளை பார்த் தால் நஷ்டமே மிஞ்சுவதாக விவசாயி கள் பரிதாபத்துடன் தெரிவித்தனர்.

**உத்தமபாளையம் பகுதிகளில் வெள்ளரி, தர்ப்பூசணிபழம் விற்பனை அதிகரிப்பு**



**உத்தமபாளையம்,**

உத்தமபாளையம் பகுதிகளில் வெள்ளரி, தர்ப்பூசணி உள்ளிட்ட வைகளின் விற்பனை அதிகரித்து உள்ளது.

**<u>தர்ப்பூசணி</u>**

தேனி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத் தில் அமைந்துள்ளதால், இயற் கையாகவே இதமான சீதோஷ்ண நிலையை கொண்டுள்ளது. பசுமை பள்ளத்தாக்கு போல காட்சி அளித்தாலும் இந்த வருடம் பருவமழை பொய்த்து போன தால் தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டது. தற்போது, கோடை காலம் தொடங்கி உள்ள நிலையில் வெயிலின் உக்கிரம் அதிகமாக இருக்கிறது.

வெயிலை தாங்க முடியாமல் குளிர்ச்சி தரும் பானங்கள், உணவு வகைகள், பழங்களை மக்கள் அதிகம் விரும்பி சாப்பிட தொடங்கி உள்ளனர். அந்த வகையில் கோடை காலம் என்றாலே நம் நினைவுக்கு வரும் தர்ப்பூசணி பழங்களின் வரத்து அதிகரித்து உள்ளது. உத்தமபாளையம், கம்பம், சின்னமனூர் உள் ளிட்ட பகுதிகளில் விற்பனைக் காக தர்ப்பூசணி பழங்கள் குவித்து வைக்கப் பட்டுள்ளன.

## விற்பனை அதிகரிப்பு

இதேபோல் வெள்ளரிக்காய் விற்பனையும் சூடுபிடித்துள் ளது. ஆனால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு இவற்றின் விலை அதிகமாக உள்ளது. கோடை காலம் தொடங்கும் போது ராம சாமிநாயக்கன்பட்டி, எரசக்க நாயக்கனூர், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வற்றிய கண் மாய்களில் வெள்ளரிக்காய் விதை போட்டு வளர்க்கப்படும். தற்போது தோட்டங்களில் இவற்றை சாகுபடி செய்து, வளர்க்க தொடங்கி உள்ளனர். இன்னும் 2 மாதங்களுக்கு விற்பனை அதிகமாக நடக்கும் என்பதால் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.